

சேலம் கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயில் புதிய தேர் வெள்ளோட்டத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார். உடன் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, இணை ஆணையர் திருமதி சபர்மதி, அறக்காவலர் குழுத் தலைவர் எஸ்.டி. சக்திவேல் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் தலைமை !

# கீழையூர் கிழக்கு ஒன்றியம் பிரதாபபுரத்தில் தெருமுனைக் கூட்டம்!

## நாகை நாகராஜன், மதுமிதா சிறப்புரை !

நாகை, ஜூலை 10 - நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் பிரதாபபுரம் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது. தெருமுனைப் பிரச்சார கூட்டத்திற்கு கீழையூர் கிழக்கு ஒன்றியம் கழக செயலாளர் தாமஸ் ஆல்வா எடிசன் தலைமை தாங்கினார்.மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டேனியல் சத்யா, ஒன்றிய துணை அமைப்பாளர்கள் சிக்கந்தர் பாசித்,வீரராகவன்,புலிகேசி,கர்னால் டெரிக்,பயாஸ் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் புகழேந்திரன் வரவேற்றார். கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் நாகை நாகராஜன், இளம் பேச்சாளர் மதுமிதா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், மாவட்ட பிரதி நிதி ஞான சேகரன்,இளம்பரிதி, நரசிம்மன்,ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப்பிர மணியன், அருள் செந்தில், பூவை. முருகு,ரவிச்சந்திரன், அனுசியா மற்றும் கிளை கழக செயலாளர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் பொதுமக்கள் பங்கேற்றனர். முடிவில் இளைஞரணி துணை அமைப்பாளர் கார்கின் நன்றி கூறினார்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் மத்திய ஒன்றியம் வாலாஜா நகரத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை பரப்புரையை அரியலூர் மத்திய ஒன்றிய செயலாளர் அண்ணன் தெய்வ இளையராஜா அவர்கள் தலைமையில் BDA , BLA2 உறுப்பினர் சேர்க்கைக்கான விளக்க கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் வளவனூர் ப.அன்பரசு ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு என்பது திமுகவுக்கான உறுப்பினர் சேர்க்கைக்காக மட்டுமல்ல; தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க அனைவரையும் ஓரணியில் திரட்டுவதற்கான முயற்சி என ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய பார்வையாளர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் தொண்டரணி முருகானந்தம் அவர்கள் அரியலூர் சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில் நுட்ப அணி ராஜ்குமார், அரியலூர் மத்திய ஒன்றிய அவைத்தலைவர் ஐ.முத்துசாமி, பொருளாளர் சி.செல்லதுரை மற்றும் அரியலூர் மத்திய ஒன்றிய துணை தலைவர் பழனியாண்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பரப்புரை செய்தியை வீடு வீடாகக் கொண்டு செல்லும் வகையில் கோவை மாநகர் மாவட்டம் டவுன்ஹால், மணிக்கூண்டு அருகில் ”தமிழ்நாடு வரைபட பலகை ‘1’ எனும் பலகையுடன் ”, ‘ஓரணியில் தமிழ்நாடு’ வாசகம் மாநகர் மாவட்ட செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் முன் நின்று தமிழ் ”மண், மொழி, மானம் காத்திட ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும் முழக்கங்களை எழுப்பினார். இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், கழக தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், பகுதி பொறுப்பாளர்கள் வி.ஐ.பதுருதீன், மார்க்கெட் எம்.மனோகரன், என்.ஜே.முருகேசன், ஆ.கண்ணன், கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், வி.பி.முபசிரா, மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ.அப்பாஸ், டவுன் பா. ஆனந்த், நா.தங்கவேல், ப.ப.சிவகுமார், சுரேஷ் நாராயணன், வழக்கறிஞர்கள் குமணன், வினோத்குமார், இளைஞர் அணி தினேஷ்குமார், மாமன்ற முன்னாள் உறுப்பினர் கேசவன் உள்பட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் பிரதாபபுரம் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கீழையூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆ. தாமஸ்ஆல்வாஎடிசன்,தலைமை கழக பேச்சாளர் நாகை நாகராஜன்,இளம் பேச்சாளர் மதுமிதா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ்,மாவட்ட பிரதிநிதி ஞானசேகரன், இளம்பரிதி,நரசிம்மன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டேனியல் சத்யா.ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் புகழேந்திரன், துணை அமைப்பாளர்கள் சிக்கந்தர்பாசித், வீரராகவன்,புலிகேசி,கர்னால் டெரிக், பயாஸ் கார்கின் மற்றும் பலர் உள்ளனர்.

